நகராட்சி அலுவலகம்
பொன்னேரி .

கூட்டம் எண். 04 / 2024 நாள்: 25.09.2024

## சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2024 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் . அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**பொன்னேரி நகராட்சி**

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

### பொருள் எண் 1

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஆகஸ்ட் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- பதிவு செய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 537 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: August – ஆணையரின் மாத நாட்குறிப்பு மன்ற பதிவிற்கு**

### பொருள் எண் 2

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2024 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- பதிவு செய்யலாம்.
நகர்மன்ற தீர்மான எண்: 538 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: August – பொறியாளரின் மாத நாட்குறிப்பு மன்ற பதிவிற்கு**

### பொருள் எண் 3

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.1319/2021/பி1, நாள்.29.12.2022 -ன்படி , பள்ளி மாணவ, மாணவிகளின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் விதமாகவும், அரசு பள்ளி மாணவ மாணவியர்களின் நலன் கருதியும், தேர்வுகளுக்கு தயார்படுத்தி கொள்ளும் பொருட்டு, 2024–25 ஆம் கல்வி ஆண்டில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் அரசு பள்ளிகளுக்கு ( சனிக்கிழமை, ஞாயிற்றுகிழமை மற்றும் அரசு விடுமுறை

நீங்கலாக) தினகரன் தமிழ் நாளிதழ் பள்ளிகளில் விநியோகம் செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.25,000/- ற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1124/2022/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 539 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: அரசு பள்ளி மாணவ மாணவியர்களின் நலன் கருதி தினகரன் தமிழ் நாளிதழ் பள்ளிகளில் விநியோகம் செய்திட – செலவினம் ரூ.25,000 /- க்கு .** பொது நிதியில் மேற்கொள்ள –மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 4</u>

பொன்னேரி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், குப்பைகள் தேங்காமல் தினந்தோறும் அப்புறப்படுத்தவும் இந்நகராட்சிக்கு தூய்மை பணியாளர்களை வெளிக் கொணர்வு முறையில் மன்ற தீர்மான எண் 216 நாள் 28.04.2023ன்படி M/s.MVK Murugan நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த பணிக்காலம் 30.04.2024ல் முடிவுற்றதை தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோரிட இயலாத நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்காக மேற்படி பணியை மேற்கொள்ளும் M/s.MVK Murugan நிறுவனத்திற்கு மே 2024 முதல் ஜுலை 2024 வரை அதே விலை விகிதத்தில் 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேலும் ஆகஸ்ட் 2024 முதல் ஏப்ரல் 2025 வரை 9 மாதங்கள் சேர்த்து ஓராண்டிற்கு M/s.MVK Murugan நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் கால நீட்டிப்பு செய்திடவும் பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி பணி மேற்க்கொண்டமைக்கு நகர்மன்ற தலைவரின் பின்னேற்பு பெற மன்றம்அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொது சுகாதாரம் நலன்கருதி பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்
2. செலவினத்தினை Single Nodal Account -லிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 727/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 540 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** தூய்மை பணியாளர்களை வெளிக் கொணர்வு முறையில் மன்ற தீர்மான எண் 216 நாள் 28.04.2023ன்படி M/s.MVK Murugan நிறுவனத்திற்கு Aug 24 to April 2025 வரை – கால நீட்டிப்பு செய்திட நகர் மன்ற தலைவரின் பின்னேற்பு பெற மன்றம் அனுமதி அளிக்கிறது.

செலவினத்தினை Single Nodal Account -லிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.
மேலும் ஒப்பந்ததாரர் தனது பணிகளை நல்ல முறையில் ஒராண்டுகாலம் முடிந்ததாக ஒப்பந்ததாரரின் வேண்டுகொளின் அடிப்படையிலும் ஒப்பந்த விதிமுறைகளின்படியும் ஆண்டிற்கு 10% கூடுதல்

தொகை வழங்க வழிவகையுள்ளதாக Aug 2024 முதல் April 2024 வரை ஒப்பந்ததாரரின் கோரிக்கையை ஏற்று 10% கூடுதல் தொகை வழங்க மன்றம் அனுமதியளிக்கிறது.

## பொருள் எண் 5

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, டெங்கு காய்ச்சலை தடுக்கும் பொருட்டு டெங்கு கொசு ஒழிப்பு மஸ்தூர் ( DBC ) பணியானது 15.03.2024 முதல் 15.09.2024 வரையிலான 6 மாத காலத்திற்கு இந்நகராட்சி தீர்மான எண் 456 நாள் 14.03.2024 அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் தாட்சன்யா என்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தற்போது மழைக்காலம் துவங்கியுள்ளதாலும், பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் அவசர அவசியம் கருதி டெங்கு நோய் பரவலை தடுக்கும் பணியினை மேற்கொள்ள 16.09.2024 முதல் 15.03.2025 வரையிலான 6 மாத காலத்திற்கு அதே நிறுவனத்திற்கு அதே விலை விகிதத்தில் நீட்டிப்பு செய்திட நகர்மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண் 06/2021 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 541 நாள்: 30.09.2024

**தீர்மானம்:** DBC பணியினை மேற்கொள்ள 16.09.2024 முதல் 15.03.2025 வரை 6 மாத காலத்திற்கு – நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதி அளிக்கிறது.

நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 6

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பணிக்கு தேவையான கிருமிநாசினிகள், புகைபோக்கி கொசு ஒழிப்பு மருந்துகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட குளோரினேஷன் செய்ய பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்பு தூள் , பினாயில், அபேட், இதர பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை 6 மாத காலத்திற்கு Sukguru Society Services நிறுவனத்திடமிருந்து தீர்மான எண் 423 நாள் 05.03.2024ன் படி கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. ஒப்பந்த காலம் முடிவுறும் நிலையில் பொதுசுகாதார பணியானது அன்றாடம் மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப்பணி என்பதால் 6 மாதங்களுக்கு தேவையான அனைத்து பொதுசுகாதார பொருட்களை Sukguru Society Services என்ற நிறுவனத்திடமிருந்து அதே விலை விகிதத்தில் கொள்முதல் செய்திட நீட்டிப்பு செய்யவும் மற்றும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண் 341/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 542 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** பொதுசுகாதார பணிக்கு தேவையான பொருட்களை **6** மாத காலத்திற்கு Sukguru Society Services அதே விலை விகிதத்தில் கொள்முதல் செய்திட – நீட்டிப்பு செய்யவும் செலவினம் ரூ.**5.00** இலட்சத்தில் செலவினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 7

பொன்னேரி நகராட்சி, நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டில் உள்ள BOLERO வாகனம் TN18BK4856–ற்கு காப்பீடு முடியும் தருவாயில் உள்ளதால், Insurance Premium புதுப்பித்து கொள்ள ரூ.**34,322/–** காசோலை வழங்குமாறு United India Insurance நிறுவனம் மூலமாக Invoice பட்டியல் வரப்பெற்றுள்ளதை, மன்ற பார்வைக்கும், மேற்கண்ட நிறுவனத்திற்கு காப்பீடு தொகை செலுத்த நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும்.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்..
2) ஈப்புவாகனத்தின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

   (ந.க. எ.ண் 659/2021/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 543 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** நகராட்சி ஆணையரின் – BOLERO TN18BK4856 – Insurance Premium - புதுப்பித்து கொள்ள ரூ.**34,322/–** காசோலை வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 8

இந் நகராட்சியில் பணிபுரியும் திரு.எஸ். விஜயன், ஓட்டுநர் **20** ஆண்டுகள் மாசற்ற முறையில் பணியாற்றி முடித்தமைக்கு தங்க பதக்கம் வழங்குமாறு தெரிவித்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.18313/2022 /எச் 3 நாள் 13.09.2021ல் வரப்பெற்றுள்ளது. மேலும், மேற்படி தங்கபதக்கம் வழங்க ஆகும் செலவினம் , சம்மந்தப்பட்ட நகராட்சிகளிடம் பெற்றுக் கொள்ள

தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே , மேற்படி தங்கபதக்கம் வாங்கி வழங்க ஆகும் தோராய செலவினம் ரூ.40,000/– க்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 1426/2023/சி1 )

நகர்மன்ற தீர்மான எண்: 544 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** திரு.S.Vijayan–Driver, 20 year பணியாற்றிமைக்கு தங்க பதக்கம் வழங்க ரூ.40,000/.க்கு வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது

## <u>பொருள் எண் 9</u>

பொன்னேரி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் மூன்றாம் ஆண்டு குத்தகை இனங்களில்

1. பழைய பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் சிறுநீர் கழித்தல், குளியல் போன்ற இனங்களுக்கு பயன்படுத்தும் பொதுமக்களுக்கு கட்டண வசூல் செய்ய இரசீது புத்தகம் தயார் செய்யவும்,

2. சாலையோர சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு சுங்கம் வசூல் செய்ய கட்டண ரசீது புத்தகம் தயார் செய்து துறை ரீதியாக வசூல் மேற்கொள்ள உள்ளூர் பிரஸ்களில் அச்சடித்து வழங்க தோராய செலவினம் ரூ 40000/-யினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>**

பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதிக்கலாம் .
( ந.க.எண் 970/2024/ அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 545 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: 1.** Old Bus Stand – ல் உள்ள நவீன toilet – கட்டண வசூல் செய்ய இரசீது புத்தகம் தயார் செய்யவும்

**2.** சாலையோர, சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு வசூல் செய்ய கட்டண ரசீது புத்தகம்

தயார் செய்ய – ரூ 40000/- பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள நகர் மன்ற தலைவரின், முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 10</u>

பொன்னேரி நகராட்சியில் 2023 மற்றும் 2024 ம் ஆண்டிற்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து பணிக்கான வேலையில் பிடித்தம் செய்த வருமான வரி சேவை வரி மற்றும் சரக்கு கட்டண வரி அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி அரசு கணக்கில் செலுத்தக்கப்பட்ட தொகை ஒப்பந்ததாரர்கள் கணக்கில் வரவு வைக்க கலந்தாலோசனை

நிறுவனத்திற்கு தொகை செலுத்த வேண்டியுள்ளது. மேற்படி தொகை உத்தேசமாக ரூ.90,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் , கலந்தாலோசனை நிறுவனத்திற்கு தொகை வழங்கவும், மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண் 969/2024 /பி1)

நகர்மன்ற தீர்மான எண்: 546 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** 2023 – 2024 – அரசு கணக்கில் செலுத்தப்பட்ட தொகை ஒப்பந்ததாரர்கள் கணக்கில் வரவு வைக்க கலந்தாலோசனை நிறுவனத்திற்கு ரூ.90,000/- தொகை வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 11

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டு வருமான வரித்துறைக்கு செலுத்துமாறும் தாமதமாக செலுத்தியதற்கு அபராதமும் விதித்து வருமான வரி துறை அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன்படி 2011 ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள வரித்தொகையினை செலுத்தவோ அல்லது சரி செய்யவோ வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் செலுத்த வேண்டியிருப்பின் செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண் 969/2024 /பி1)

நகர்மன்ற தீர்மான எண்: 547 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** 2011 –ம் ஆண்டு முதல் நிலுவையில் உள்ள வரித்தொகையினை செலுத்தவோ அல்லது சரி செய்யவோ வேண்டியிருப்பின் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 12

அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.07.12.2021–ன் படி பொன்னேரி தேர்வு நிலை பேரூராட்சியிலிருந்து 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 2ம் நிலை நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 தட்டச்சர் பணியிடம் நிரப்பப்படாமல் காலியாக உள்ளது. இந்நிலையில் அனைத்து

நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளுதல், அலுவலகப்பணிகள், திட்டப்பணிகள், தேர்தல் பணிகள் , நகர்மன்ற பணிகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யவும், அறிக்கைகள் தயாரித்து தட்டச்சு செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள நகராட்சி பணியாளர்கள் இல்லாததால் கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள தேவையான புள்ளி விவரக்குறிப்பாளரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விலை விகிதத்திற்குட்பட்டு நாள் ஒன்றுக்கு ரூ.730/– ( அனைத்து பிடித்தங்கள் உட்பட ) என்ற நிலையில் வெளிக்கொணர்வு ( Outsourcing ) முறையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ. 3.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
   ( ந.க.எண்.756 /2024/ சி1 )

நகர்மன்ற தீர்மான எண்: 548 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: 23.01.2023**ன்படி அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் தட்டச்சு நாள் ஒன்றுக்கு ரூ.**730/–** முறையில் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்திக்கொள்ள தொகை ரூ. **3.50/–** செலவினை பொதுநிதியில் மேற்கொள்ள – மன்றம் அனுமதிக்கு

## <u>பொருள் எண் 13</u>

இந்நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.25,000 /- ற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 724 /2024/சி1)

நகர்மன்ற தீர்மான எண்: 549 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** தினசரி நாளிதழ்கள் செலவினம் ரூ.25,000 /- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்குகிறது

## <u>பொருள் எண் 14</u>

இந் நகராட்சியில் சர்வே எண் 465/5A1B ல் திருமதி சாந்திபாய் கபெ மோகன்லால் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக அறிவித்து அனுப்பப்பட்ட அறிவிப்பின்பேரில் மேற்படி பகுதியில் நகராட்சி சார்பாக சுற்றுசுவரை இடித்து அப்புறப்படுத்த தடையாணை கோரி பொன்னேரி முன்சீப் நீதிமன்றத்தில் திருமதி. சாந்திபாய் என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு W.P.No 75 /2024 நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞரை கொண்டு வழக்கினை நடத்தவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.15000/- நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 892/2024/எப்1 )

நகர்மன்ற தீர்மான எண்: 550 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: – Survey NO.** 465/5A1B – Smt Santhibai என்பவர் தொடர்ந்துள்ள வழக்கினை அரசு வழக்கறிஞரை கொண்டு நடத்தவும் – கட்டணம் ரூ.15000/- பொதுநிதியிலிருந்து செலுத்த மன்றம் வழங்குகிறது.

## பொருள் எண் 15

இந் நகராட்சியில் திருவாயர்பாடி பகுதியில் சர்வே எண் 345/47 ல் பேருந்து நிறுத்தம் அமைக்கப்படுவதற்கு தடையாணை வழங்கக்கோரி திருமதி. கோட்டிஸ்வரி என்பவர் பொன்னேரி முன்சீப் நீதிமன்றத்தில் நகராட்சி ஆணையாளரை எதிர்மனுதாராராகக்கொண்டு தொடர்ந்த வழக்கு O.S.No 74/2024 ல் அரசு வழக்கறிஞரை கொண்டு வழக்கினை நடத்தவும், அதற்கான தோராய செலவினம் ரூ.15000/- பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 892/2024/எப்1 )

நகர்மன்ற தீர்மான எண்: 551 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: – Survey NO.** 345/47 ல் பேருந்து நிறுத்தம் அமைக்கப்படுவதற்கு தடையினை வழங்கக்கோரி – ஆணையாளரை – எதிர்மனுதாரர்ராகக் கொண்டு தொடர்ந்த வழக்கு O.S.No 74/2024 ல் அரசு வழக்கறிஞரை கொண்டு நடத்திட – ரூ.15000/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 16

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள பேட்டரியால் இயங்கும் வாகனங்களை பழுதுநீக்கம் செய்ய ரூ.6.35 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண் 398 நாள் 05.03.2024ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் வாகனங்கள் பழுதுநீக்கம் செய்த நிறுவனத்திடமிருந்து பழுதுநீக்கம் செய்தமைக்கு ரூ.7.63 இலட்சத்திற்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே கூடுதல் செலவினம் ரூ.1.30 இலட்சத்திற்கு பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்: 626/2022 /H1)

நகர்மன்ற தீர்மான எண்: 552 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: – BOV – Repair செய்ய தீர்மாணம் எண். 398 – 05.03.2024** ரூ.6.35 L/- அனுமதி பெறப்பட்ட நிலையில் – கூடுதல் செலவினம் ரூ.1.30 L/- பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பேருந்து நிலையம் அரி அரன் பஜார் தெருவில் (சர்வே எண்.345/3,4) அமைந்துள்ள பழைய கடைகள் கட்டிடம் பழுது பட்டு மழை நேரங்களில் நீர் கசிவு ஏற்படுவதுடன் பொது மக்கள் பயன் படுத்த முடியாத நிலை உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண்: 724/2024/ சி1)

நகர்மன்ற தீர்மான எண்: 553 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: Old Bus Stand – Hariharan Bajaar – S.No. 345/3,4 அமைத்துள்ள பழையகடைகள் – இடித்து அப்புறப்படுத்த – மன்றம் அனுமதி அளிக்கிறது.**

## பொருள் எண் 18

பொன்னேரி நகராட்சியில் ஆறாவது மாநில நிதிக்குழு 2022–2023 திட்டத்தின் கீழ் புதியதாக கடைகள் கட்ட இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 977/2023/இ1 நாள்:06.08.2024–ன்படி 06.09.2024 அன்று கீழ்கண்ட விவரப்படி ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி சதவீதம் | குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | அரிஅரன் பஜார் தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் (சர்வே எண் 345/3,4 மற்றும் தேரடி தெருவில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலைய வளாகத்தில் (சர்வே எண் 460/A) கிழக்கு பகுதியில் புதியதாக கடைகள் கட்டுதல | 130.00 | திரு.E.அருண்ராஜ் 0.36 % மதிப்பீட்டைவிட அதிகம் | திரு. E.சுமன் 0.06 % மதிப்பிட்டை விட குறைவு |
| | | | திரு. E.சுமன் 0.06 % மதிப்பிட்டை விட குறைவு | |

அலுவலக குறிப்பு

1. குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. கலம் எண் 5–ல் கண்ட குறைந்த ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண்: 554 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: 6th** State 2022 -2023 – புதியதாக கடைகள் கட்ட **06.09.2024** அன்று பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் – குறைந்த ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கிறது. குறைந்த ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பதிவு செய்கிறது.

## <u>பொருள் எண் 19</u>

பொன்னேரி நகராட்சியில் எதிர்வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள 5 எண்ணிக்கையிலான 5 HP திறன் கொண்ட ஆயில் என்ஜின்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய, அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஆவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.864/2024 இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 555 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: 5** Nos. 5 HP திறன் கொண்ட Oil Engine- களில் பழுதுகளை சரிசெய்ய ரூ.**50000/–** மன்றம் அனுமதி வழங்குகிறது. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 20</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரினை ஏற்கனவே உள்ள டீசல் மோட்டார்கள் மற்றும் மின்மோட்டார்கள் மூலம் வெளியேற்ற தேவையான குழாய்கள் , Starters , வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள் , சவுக்கு கொம்புகள் போன்றவற்றினை தயார் நிலையில் வைத்துக்கொள்ள ஏதுவாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம் .

( ந.க.எண். 864 /2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 556 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** எதிர்வரும் வடகிழக்கு பருவமழையின் போது தேங்கும் மழைநீரினை அகற்ற தேவையானவைகளை கொள்முதல் செய்ய – தொகை ரூ.2.50L /- மன்றம் அனுமதி வழங்குகிறது. பொதுநிதியின் கீழ்

## பொருள் எண் 21

இந்நகராட்சி பகுதிகளில் எதிர்வரவுள்ள வடகிழக்கு பருவமழையின்போது தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்க சாலையோரங்களில் மண்கால்வாய் அமைக்கவும், , வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், தேவையான ஜேசிபி வாகனங்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினால் இநககராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரையில் வாடகை அடிப்படையில் ஜேசிபி வாகனங்களை பயன்படுத்திக்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசியம் கருதி மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம் .

   ( ந.க.எண். 864/2024/இ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 557 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** Wd 1 – 27 வரையில் வாடகை அடிப்படையில் JCB – வெள்ளத்தடுப்பு பணிகளை மேற்கொள்ள – தொகை ரூ.4,90 L /- பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 22

பொன்னேரி நகராட்சி 18வது வார்டுக்குட்பட்ட தாலுக்கா அலுவலக சாலையின் இருபுறமும் ரூ.31.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை NTECL நிறுவனம் மூலம் பெருநிறுவன சமூக பொறுப்பு உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் / பெருந்தலைவர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை , திருவள்ளூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 1287098/2023/அ2 நாள் 14.09.2024ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும், வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

   ( ந.க.எண். 680/2024 இ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 558 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** Wd 18– தொகை 31.00 L, பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணியினை NTECL மூலம் CSR கீழ் நாள் 14.09.2024 – நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றம் பதிவு செய்கிறது.

## பொருள் எண் 23

இந்நகராட்சியில் 2ம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 10 நாள் 23.01.2023 ன்படி பொறியியல் பிரிவிற்கு

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 1 பட வரைவாளர் மற்றும் 2 பணி ஆய்வாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதால் தனியார் வெளிக்கொணர்வு முறையில் ( Out Soucing ) முறையில் இரண்டு எண்ணிக்கை தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் ஒரு எண்ணிக்கை மஸ்தூர் பணியாளர் பணியமர்த்திக்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண் 104/2023 /அ1 நாள் **09.11.2023**ன்படி ரூ.**10.80** இலட்சத்திற்கு ஒப்பந்தபுள்ளி பெற்றப்பட்டு இவ்வலுவலக பணி உத்திரவு ந.க.எண் 104 /2023 /அ1 நாள் **24.11.2023**ன்படி உத்திரவு வழங்கப்பட்டதில் ஆறுமாத காலத்திற்கு பெறப்பட்டதில் தற்போது வரைரூ. **3,45,558 /-** மட்டுமே செலவிடப்பட்டுள்ளதால் மதிப்பீட்டு தொகையில் மீதம் தொகை உள்ளதால் இம்மதிப்பீட்டிலேயே உள்ள தொகை வரை இப்பணியாளர்களுக்கான தொகை செலவிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 104/2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 559 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** G.o 10 – Date **23.01.2023** ன்படி பொறியியல் பிரிவிற்கு **– 1** பட வரைவாளர் மற்றும் **2** பணி ஆய்வாளர்கள் பணியமர்த்திக்கொள்ள ஒப்பந்தபுள்ளி அறிக்கை எண் **104/2027** நாள் **09/11**/2023 -ரூ.**10.80** L/- தற்போது வரை ரூ. **3,45,558/–** செலவிடப்பட்டதால் மீதம் தொகை இப்பணியாளர்களுக்கு செலவிட நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டமைக்கு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## <u>பொருள் எண் 24</u>

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண்.**14** நீலிஅப்பாதுரை விரிவாக்கம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணிக்கு இடையூறாக சாலையில் உள்ள 1 மின்கம்பத்தினை மாற்றி அமைக்க உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னேரி அவர்களுக்கு கடிதம் அனுப்பியதில் ரூ.**14833/-** செலுத்தக்கோரி கேட்பு வரப்பெற்றதை தொடர்ந்து தொகை செலுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு

<u>அலுவலக குறிப்பு</u>

அவசியம் கருதி மேற்படி செலவினத்தை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.**262/2023/இ1**)

நகர்மன்ற தீர்மான எண்: 560 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: Wd No.14 . Neeli Appadurai** விரிவாக்கம் பணிக்கு – இடையூராக சாலையில் உள்ள 1 மின்கம்பத்தினை மாற்றி அமைக்க ரூ.14833/- தொகை செலுத்திட, செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது

## பொருள் எண் 25

பொன்னேரி நகராட்சி, 6வது மாநில நிதிக்குழு மானியம் 2022-23ன்கீழ் அரிஅரன் பஜார் தெருவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையம் பகுதி (சர்வே எண் 345/3,4) மற்றும் தேரடி தெருவில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலைய வளாகத்தில் (சர்வே எண் 460/3A) கிழக்கு பகுதியில் புதியதாக கடைகள் அமைத்தல் பணி ரூ 130.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளி கோரும் விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் தென்னிந்திய அளவில் 11.08.2024 அன்று வெளியிடப்பட்டது. விளம்பரம் வெளியிட்ட வகையில் ரூ.75,758/– வழங்குமாறு M/S Accord Advertising, Chennai நிறுவனம் மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்
( ந.க.எண் 977 /2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 561 நாள்: **30.09.2024**

**தீர்மானம்: 6**வது மாநில நிதிக்குழு **2022-23**ன்கீழ் survey No. **345/3,4 – 460/**3A புதியதாக கடைகள் அமைத்தல் பணி **–** ரூ.**130** L /**–** தென்னிந்திய அளவில் **11.08.2024** – விளம்பரம் வெளியிட்ட வகையில் **–** ரூ. **75,758/–** M/s Accord Advertising, Chennai**–** க்கு தொகை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 26

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2024 – 25 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள இவ்வலுவலக மறு ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண். 104/2023/ இ1 நாள். 05.09.2024 ன்படி 20.09.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பஜனைகோயில் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்துதல் | 0.70 | M/s D.G.H & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.11 % குறைவு |
| | | | திரு.பி.ஜோதீவரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.21 % அதிகம் |
| 2 | வரதப்பன் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்தல் | 4.90 | M/s D.G.H & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16 % குறைவு |
| | | | திரு.பி.ஜோதீவரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.13 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

( ந.க.எண் 104/2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 562 நாள்: **30.09.2024**

**தீர்மானம்:** பொது நிதி 2024 – 2025–ன் கீழ் ஒப்பந்தபுள்ளி அறிக்கை ந.க.எண். 104/2023 – 05.09.2024ன்படி – 20.09.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் அனுமதிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.